**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No. 10/2021** |
| Deposition of witness for | Prosecution **- LW - 1 / PW - 1**<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : **திருமதி. ஜீவா** |
| Father's Name | : திரு. முனிரத்தினம் |
| Village | : கீழ்நேத்தப்பாக்கம் |
| Taluk | : செய்யாறு |
| Calling | : கூலி வேலை |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th Day of August 2025.

**(எதிரி ஆஜர்.)**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை :**

1. நான் கீழ்நேத்தப்பாக்கம் கிராமத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். கடந்த 06.12.2013—ம் தேதி மதியம் 12.30 மணிக்கு நான் எனது கழனிக்கு சென்று எனது வீட்டிற்கு வரும் வழியில் நான் அண்ணக்கூடை எடுத்து வரும்போது ஆஜர் எதிரி ஜோதி கொடுவா கத்தியை எடுத்து வந்து என் வலது கையிலும், கழுத்திலும், இதோடு ஒழிந்து போடி என்று சொல்லி வெட்டினார். மேலும், என்னை தெவிடியா ங்கோத்தா என்று அசிங்கமாக

பேசி திட்டினார். என்னுடைய வலது கை அப்படியே துண்டாகிவிட்டது. கழத்திலும், இரத்தம் வந்தது. மேலும், எதிரி என்னை இடது கையிலும் கொடுவா கத்தியால் வெட்டினார். சாட்சியானர் தன்னுடைய வலது கை வெட்டி அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருப்பதையும், இடது கையில் உள்ள காயத்தையும், கழுத்தில் உள்ள காயத்தையும் காண்பிக்க அந்த இடங்களில் காயத்தழும்புகள் உள்ளது.

2. பின்னர், நான் மயக்கமாகி கீழே விழுந்துவிட்டேன். பின்னர், என்னை ஆம்புலன்ஸ் மூலமாக காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். அதன்பிறகு சென்னை ஸ்டேன்லி மருத்துவமனைக்கு மேல்சிக்சைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு எனக்கு வெட்டிய கையினை ஒட்டவைத்து அறுவை சிகிச்சை செய்தார்கள். நான் 2 மாதம் சென்னை ஸ்டேன்லி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். இது சம்மந்தமாக நான் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தூசி போலீசார் வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள்.

3. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் – அ.சா.ஆ.1**. தற்போது என்னிடம் காட்டப்படும் கொடுவாள் கத்தியால்தான் ஆஜர் எதிரி என்னை வெட்டினார். **அந்த சுமார் முழு நீளம் 43 செ.மீ. மரக்கைப்பிடியின் நீளம் 20 செ.மீ., இரும்பு பாகத்தின் நீளம் 23 செ.மீ. கொண்ட கொடுவாள் கத்தி ஒன்று – அ.சா.பொ.1 ஆகும்.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** : இல்லை.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.14 17:31:41 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**